முகப்போவியம்: 450

# கவிஞர் காவிரி மைந்தன்

– முனைவர் இளமாறன்



**கா**லத்தின் கொடை கவியரசு கண்ணதாசன். திரைப் பாடல்கள் துறையில் தமக்கென்று தனியிடம் வகித்து இன்றுவரை மக்கள் மனங்களில் நிலைத் திருப்பவர். 'நான் நிரந்தரமானவன் அழிவதில்லை; எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை' என்று தன்னைப் பற்றி அவர் பாடிய பாடல் எத்தகைய சரியான கணிப்பு என்பது அனைவரும் அறிந்தது. பள்ளிப் படிப்பு குறைவென்றலும், தமிழிலக்கியப் பரப்பில் ஆழங்கால் ஊன்றி, பெற்ற அறிவைத் திரைப் பாடல்கள் மூலம் எளிய மக்களுக்கு அள்ளித்தந்த பெருங்கவிஞர். சங்க இலக்கியங்கள், சமய இலக்கியங் கள், சிற்றிலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள், தத்துவங்கள் இவரின் பாடல்களில் பளிச்சிடுவதை கற்றோர் அறிவர். இம்மாபெரும் கவிஞரின் திரைப் பாடல்களில் மனத்தைப் பறிகொடுக்காதோர் எவரும் இல்லை என்று சொல்ல லாம். இவர் இளம் வயதிலேயே மறைந்தாலும், எல்லா வயதின ரிடையும் எல்லாக் காலங்களிலும் வாழ்ந்து கொண்டிருப்பார். இப்பெருங் கவிஞரின் புகழைப் பாடிவருவோர் பலர் இருந்தாலும், மன்றங் கண்டு இவர் புகழைப் பரப்பி வருபவர் கவிஞர் காவிரி மைந்தன்.

மக்கள்திலகம் எம்.ஜி.ஆர். அவர்களின் படங்களால் கவரப்பட்டு, அதில்வரும் கவியரசு கண்ண தாசன் பாடல்களால் ஈர்க்கப்பட்டு, அப்பாடல்களோடு பிணைந்து, கண்ணதாசன் புகழைப் பாடு வதற்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் கவிஞர் காவிரி மைந்தன். இக்கட்டுரையாளரின் 45 ஆண்டுக் கால நண்பர்.

சென்னை பம்மலில் 1991இல் கண்ணதாசன் தமிழ்ச்சங்கம் என்னும் அமைப்பை நிறுவி, திரு.எம்.கே.மணி, திரு.அ.நாகப்பன் முதலான நண்பர்களின் துணை யோடு ஆண்டுதோறும் கண்ண தாசன் விழாக்களை நடத்திய பெருமைக்குரியவர்.

கவியரசர் வாழ்ந்த தியாகராய நகரில், கோபதி நாராயணசாமி செட்டித்தெருவில், சர்.பிட்டி தியாகராயர் அரங்கம் அருகில் கம்பீரமாக சிரித்துக்

கொண்டிருக்கும் கவியரசு கண்ணதாசன் சிலை அமைய ஊற்றுக்கண் கவிஞர் காவிரி மைந்தன். கண்ணதாசனை நாளும் இதயத்தில் வைத்துத் தொழுதுகொண்டிருந்த மெல்லிசை மாமன்னர் எம்.எஸ்.விசுவநாதன் அவர்களின் பெருந்துணையுடன் எட்டே மாதங்களில் கண்ண தாசனின் வெண்கலச் சிலை உருவாகி, தமிழக அரசே அச்சிலையை ஏற்று 9.12.1994இல் திறந்து வைத்தது.

கண்ணதாசன் தமிழ்ச்சங்க நிருவாகிகள் ஒன்றுசேர்ந்து 17.10.2004இல் பெரும் வள்ளல் களின் பங்களிப்போடு கண்ண தாசன் - விசுவநாதன் அறக் கட்டளையை நிறுவி, ஆண்டு தோறும் அக்டோபரில் கண்ண தாசன் நினைவுநாளில் பெரும் விழாக்கள் நடத்தி வருகின்றனர். கடந்த ஆண்டு விழாப் பேருரை யாற்றியவர் நடிகர் சிவக்குமார்.

கண்ணதாசன் தமிழ்ச் சங்கத்தின் தலையாய இலட்சிய மாய் 30 ஆண்டுகளுக்கும் மேலாக காவிரி மைந்தனின் கனவாய் 'கண்ணதாசன் கலைக் கூடம்' நிறுவப்பட்டு பொற்காலப் பாடல்களை உருவாக்கிய பெருமக்களைப் பாராட்டி விழா எடுத்து வருகின்றார். இதன் முத்தாய்ப்பாய் உலகமெங்கும் உள்ள கண்ணதாசன் பற்றாளர் களை ஒன்று திரட்டி வருகின்ற 2028ஆம் ஆண்டு கண்ணதாசன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் முயற்சியில் ஈடுபட்டு வருவதுடன், கண்ணதாசன் பெயரில் ஒரு பல்கலைக் கழகம் அமையவும் முயன்று வருகின்றார்.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையைப் பூர்வீகமாகக் கொண்ட திரு. மா.முத்தையா - திருமதி மு.தங்கம் இணையருக்கு 10.11.1961இல் பிறந்தவர் இரவிச் சந்திரன் என்னும் இயற்பெயர் கொண்ட காவிரி மைந்தன். பள்ளிக் கல்வியை சென்னை அடையாறு குமாரராஜா முத்தையா உயர் நிலைப் பள்ளியிலும், சென்னை நந்தனம் கலைக் கல்லூரியில் இளங்கலை அறிவியலும், சட்டக் கல்லூரியில் பி.ஜி.எல். பட்டமும் பெற்றவர். சென்னை ஸ்பிக் உர நிறுவனத்தில் பணியேற்ற இவர், பணியின் பொருட்டு துபாய் அமீரகத்தில் 14 ஆண்டுகள் பணியாற்றினார்.

அமீரகத்தில் பணியாற்றும் போது இவருடைய தமிழ்ப்பற்று அங்கேயும் தமிழ்த்தொண்டாற்ற வைத்தது. 'வானலை வளர்தமிழ் இலக்கிய அமைப்பினை' ஏற்படுத்தி மாதந்தோறும் கவியரங்கம், பட்டி மன்றம், கருத்தரங்கங்கள் நடத்தி யுள்ளார். அறிஞர்களை உரை யாற்ற வைத்து மெருகேற்றி யுள்ளார். தமிழன்பர்களை ஒன்றிணைக்க 'தமிழ்த்தேர்' என்னும் சிற்றிதழை நடத்தி, அதில் படைப்பாளர்களை ஊக்கப் படுத்தியவர். அமீரகத்திலிருந்து

சென்னை வந்ததும், 'பம்மல் கண்ணதாசன் தமிழ்ச்சங்கத்'தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றார்.

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் பெரும் விழாக்களை நடத்தி வருவதுடன், இணைய வழியில் மாதந்தோறும் திரைக் காவியங்கள் திறனாய்வு என்கிற நிகழ்ச்சியை அமெரிக்கத் தொலைக் காட்சியுடன் இணைந்து நடத்தி வருகின்றார். இதில் இதுவரை 25 நிகழ்வுகளுக்கும் மேலான திரைப் படங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நிகழ்வுகள் காணொலியிலும் காணக் கிடைக்கின்றன. கண்ண தாசன் கலைக்கூடமும், நான் ஓர் ஐ.ஏ.எஸ். அகாதெமியும் இணைந்து மாதந்தோறும் 'சொல்வ தெல்லாம் கண்ணதாசன்' என்னும் இணையவழி நிகழ்ச்சியை நடத்தி வருகின்றார். பாட்டுப் பாடலாம் வாங்க என்னும் நிகழ்ச்சியைப் பாட ஆர்வமுள்ளோர்களைக் கொண்டு இணைய வழியில் நடத்தி வருகின்றார்.

இணைய வழியில் நெதர்லாந்து சூரியத் தமிழ்த் தொலைக்காட்சியோடு இணைந்து 'கண்ணதாசனும் வாலியும்' என்கிற சிறப்பு நிகழ்ச்சியை ஓராண்டிற்கும் மேலாக நடத்தி வருகின்றார். 'தும்பி' இலக்கிய வட்டத்தோடு இணைந்து நூல்கள் மதிப்பீடு நிகழ்ச்சியும் நடத்தப் படுகிறது. இணைய வழியில் ஆஸ்திரேலிய தாயகம் வானொலி வாயிலாக கண்ணதாசன் கலைக் கூடம் வழங்கிவரும் சிறந்த நிகழ்ச்சிகள் பல்வேறு தலைப்பு களில் நடத்தப்பட்டு வருகின்றது.

கவிஞர் காவிரி மைந்தனின் எழுத்தாற்றலுக்கும் கலையார்வத் திற்கும் களம் அமைத்துத் தந்தவர் இவருடைய தந்தை மறைந்த திரு. மு. முத்தையா அவர்கள். அவர் அளித்த ஊக்கம்தான் இவரைப் பன்னூல் படைப்பாளி ஆக்கி யிருக்கிறது. இவருடைய முதல் கவிதை நூலான 'காவிரி மைந்தன் கவிதைகள்' நூலை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 15.12.1990இல் மயிலை ஆர்.ஆர். சபாவில் வெளியிட்டுச் சிறப்பித்திருக் கின்றார்.

இவருடைய பிற நூல்கள்: "கவியரசு கண்ணதாசன் பாடல்கள் காலத்தின் பதிவுகள், கவியரசு கண்ணதாசன் பாடல்கள் காலத்தை வென்றவை, நேரம்+நிருவாகம் =வெற்றி, துபாய் வாழ் தமிழ் மக்கள் நெஞ்சில் கண்ணதாசன், வாழும் தமிழே வாலி, என் பார்வையில் கண்ணதாசன், காதல் பொதுமறை, கர்மவீரர் காமராசர், மனத்தில் நிறைந்த மக்கள் திலகம், நீ வாழ நினைத்தால் வாழலாம், சிலை பிறந்த கதை, காற்றலை களில் கண்ணதாசனின் பாட்டுத் தேரோட்டம், பொற்காலப் பாடல் களின் பூக்கோலங்கள், எம்.ஜி. ஆரின் ஆளப்பிறந்த பாடல்கள், அன்பே முழங்கு என்பனவாகும்.

இவரது இலக்கியப் பணியைப் பாராட்டி, இவருக்குப்


புதுக்கோட்டையில் 'கண்ணதாசன் விருது' வழங்கப் பெற்றிருக்கிறது. கிருஷ்ணா ஸ்வீட்ஸ 'தேர்ந்த ரசிகர்' என்னும் விருதும், தமிழக அரசின் அகவை முதிர்ந்த தமிழறிஞர் விருதும் இவர் பெற்றுள்ளார்.

காலமெல்லாம் கண்ண தாசனின் புகழைப் பாடிவரும் இவர், கண்ணதாசனை நேரில் பார்த்ததில்லை என்பது வியக்க வைக்கும் செய்தி. கண்ணதாசனின் பாடல்களை விரல் நுனியில் வைத்திருக்கும் இவர், அப்பாடல்கள் பிறந்த வரலாறுகளையும் அறிந்து வைத்திருக்கின்றார். இன்றைய காலக்கட்டத்தில் கண்ணதாசன் என்றவுடன் காவிரி மைந்தன் நினைவுக்கு வருவது தவிர்க்க இயலாததாகி இருக்கிறது. கண்ண தாசனைப் புகழ்ந்தேத்தும் காவிரி மைந்தனும் புகழ்ந்தேத்தத் தக்க சிறப்புக்குரியவர். இவருடைய பணி மேலும் சிறக்க வாழ்த்தி மகிழ்கிறோம்.

பேச: 94442 36999

---

# வாழ்க நூறாண்டு!



**த**மிழ்நாடு மூத்த குடிமக்கள் மற்றும் ஓய்வூதியர் நல உரிமைச் சங்கத்தின் மாநில அமைப்புச் செயலாளராகவும், சென்னை மாவட்டச் செயலாளராகவும் துடிப்போடு செயலாற்றும் **திரு. கி.சுப்பிரமணியம்** அவர்கள் 14.4.2024 அன்று தம் 85ஆம் அகவையில் அடியெடுத்து வைக்கின்றார்.

தமிழக தலைமைச் செயலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், நான்கு முதலமைச்சர்களை நேரில் சந்தித்து தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுத் தந்த பெருமைக்குரியவர். தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வு பெற்ற ஓட்டுநகர்கள் தலைமைச் சங்கத்தின் மாநிலத் தலைவராக 35 ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவர். இன்றளவும் மூத்த குடிமக்களுக்காக உழைத்து வரும் இவர், நல்ல உடல் நலத்துடனும் வளத்துடனும் நூறாண்டு வாழ வாழ்த்தி மகிழ்கிறோம். தம் பிறந்தநாளையொட்டி முகம் இதழுக்கு ரூபாய் 1000/- நன்கொடை வழங்கியுள்ளார்.